[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பனார் கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பது பற்றி அரசினுடைய தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

74—

ஆலந்தூரிலுள்ள மூடப்பட்ட ரேஷன் கடைகளை மீண்டும் திறக்கும் நடவடிக்கைகள்.

*10193—திரு. எஸ். அண்ணாமலை :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் நெம்பர் (1), நெம்பர் (2) எண்ணுள்ள மூடப்பட்ட ரேஷன் கடைகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென் சென்னை பரங்கிமலை மண்டலம், ஆலந்தூர் ஏகாம்பர டபேதார் தெருவில், செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையினரால் நடத்தப்பட்டுவந்த 2 அங்காடிகள் 8-2-1992ல் ஆட்டோ ஆனந்தன் என்பவர் கடை பணியாளர்களை மாமூல் கேட்டு கொடுக்க மறுத்ததால், அவர்களை ஓட ஓட விரட்டி மண்ணெண்ணெய் பேரலை தெருவில் உருட்டி, பொது மக்களுக்கு பீதி ஏற்படுத்திய காரணத்தால், 8-2-1992 லிருந்து அந்தக் கடைகள் மூடப்பட்டு மாற்று ஏற்பாடாக அருகில் இருக்கும் நியாயவிலை அங்காடியுடன் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டன. மேற்படி சமூக விரோதி ஆட்டோ ஆனந்தன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டதையடுத்து, 1-4-1992 லிருந்து அதே இடத்தில் இரு அங்காடிகளும் மீண்டுப் திறக்கப்பட்டு தக்க பாதுகாப்புடன் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. கே முனிவெங்கடப்பன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.